இலவச வெளியீடு

உ



# கருணைக் கடலே வருக! வருக!!

நியூ லீலா அச்சக இலவச வெளியீடு. 1974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கனத்தைக் கையாளாத 'தினபதி' விமர்சனம்



சிந்தனைச் சிற்பச் செல்வர்

## ச. த. சின்னத்துரை

தொண்டை மண்டலம் மெய்கண்டார் ஆதீனம் குருமகா சந்நிதானம சீலத் திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள், லீலா அச்சக அதிபரும், லீலா சித்திரக் கலண்டர் உற்பத்தியாளருமான திரு. சண்முகம் தம்பையா சின்னத்துரை ஜே பி. அவர்கட்கு 'சிந்தனை சிற்பச் செல்வர்' என்ற பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்துள்ளார்கள்.

சுவாமிகள் இலங்கையில் பலருக்கும் சாதாரண கௌரவப் பட்டங்களை அபரிமிதமாக வாரி வழங்கியபோதிலும் திரு. சின்னத்துரை அவர்களுக்கு வழங்கியுள்ள இந்தப்பட்டம் விசேஷ பெறுமதியும், முக்கியத்துவமும் வாய்ந்ததாகும். சைவத்தையும், தமிழையும், சித்தாந்தத்தையும் தொடர்புபடுத்தித்தான் சுவாமிகள் பெரும்பாலும் பட்டங்களை வழங்குவதுண்டு.

இதற்கு மாறாகத் திரு. சின்னத்துரை அவர்களுக்கு 'சிந்தனைச்சிற்பச் செல்வர்' என்ற புதுமைப்பட்டத்தைத் தேர்ந்து வழங்கியுள்ளார்கள். திரு. சின்னத்துரை அவர்கள் தயாரிக்கும் லீலா சித்திரக் கலண்டரைப் பார்வையிட்டபின்னரே அவருக்காக இப்பட்டத்தை சுவாமிகள் ஆழ்ந்த ஆய்வின்பேரில் யாத்தெடுத்தார்கள் என்று தெரிகிறது.

**லீலா சித்திரக் கலண்டரைப் பார்த்து அதிசயித்து!**

இவ்வளவு தகவல்களும், குறிப்புகளும், அருமையான படங்களும் அடங்கிய ஒரு சிறந்த சித்திரக் கலண்டரைச் சிந்தனையின் கருவூலத்தைத் தாம் இந்தியாவில்கூட கண்டதில்லை என்று சுவாமிகள் மிகவும் விதந்து, வியந்து கூறினாராம்.

அதன் பின்னரே அந்தக் கலண்டரை அமைத்த சிற்பியான திரு. சின்னத்துரை ஒரு சிந்தனைச் செல்வராக இருக்கவேண்டும் என்று மதிப்பிட்டு, அதே உட்கருத்தைப் பொதிந்து, 'சிந்தனைச் சிற்பச் செல்வர் எஸ். ரி. சின்னத்துரை' என்று சுவாமிகள் அவரை அன்புடன் அழைத்து, அவ்வாறே பட்டத்தினையும் சூட்டினர் என்று தெரிகிறது.

தினபதி 5-7-72

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எம்மைக் காக்கும் கந்தன் கருணை'

கலியுகம் வரப்போவதையும் அதனால் உலகில் ஏற்படப்போகும் இன்னல்களையும் உணர்ந்தனர் நைமிசாரண்யத்து முனிவர்கள். இவர்கள் தாம் பெறும் இன்பம் இவ்வையமும் பெறவேண்டும் என்னும் பெருநோக்குடையவர்களான காரணத்தினால் கலியின் கொடுமையில் இருந்து உலகைக் காப்பதற்கு வழிகளை ஆராய்ந்தனர். ஈற்றில் வியாசபகவானை அடைந்து கலியின் கொடுமையை அகற்ற வழி கூறுமாறு வேண்டினர். வியாசபகவான் "கந்தன் கருணை உலகைக் காக்கும்" எனக் கூறிக் கந்தப்பெருமானின் பராக்கிரமங்களைக் கூறினார்.

இன்று இந்த நிலவுலகிற் பல பிணிகள் உலக மக்களை வாட்டுகின்றன. குறிப்பாகத் தமிழ் மக்கள் பல பிணிகளை அனுபவிக்கின்றனர். 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடி' என்று போற்றப்பட்ட சமுதாயம் சுதந்திரமாய் வாழ முடியாது தவிக்கின்றது. வேலையில்லாத் திண்டாட்டம், பசிப்பிணி, நோய், பலவும் அவர்களை வாட்டி வதைக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து திணைகளுள் ஆதியானதும் உயர்ந்ததாகவும் விளங்குவது குறிஞ்சி. குறிஞ்சி, மலையும் மலையைச் சார்ந்த இடமும். உலகில் ஆதிக் குடிகளாகிய தமிழன் வாழ்ந்த இடம் குறிஞ்சி. குறிஞ்சி நிலத்துக்குத் தலைவன் முருகன் ஆதலால் அவனைக் 'குறிஞ்சிக் கிழவன்' என்று ஏத்துகிறது குவலயம். அவனே கந்தன். அவன் கருணையே எம்மைக் காக்கும்.

இன்று எம்மைத் தாக்கும் பிணிகளிலிருந்து நாம் விடுபட அவன் கருணையை நாடுவோம். ஆகையால் அவன் புகழை அல்லும் பகலும் பாடிப் போற்றுவோம்

அவன் கருணை எமக்குக் கிடைக்கவேண்டுமென்னும் பேரவாவினுல் வருடந்தோறும் அவன் புகழ் மாலைகளைப் பாடி இலவசமாக அளிக்கிறது எமது ஸ்தாபனமாகிய நியூ லீலா அச்சகம். சென்ற ஆண்டில், கந்தசஷ்டி கவசத்தை, இலவச வெளியீடாக வெளியிட்ட நாம் இந்த ஆண்டில் காங்கேயன்துறை பிள்ளையார் வளவு திரு. க. ஏரம்பமூர்த்தி அவர்களால் தொகுத்துஅளிக்கப்பட்ட 'கந்தன் கருணையே வருக!' என்னும் நூலை வெளியிடுகின்ருேம்.

இந்த நூலிற் காணப்படும் பாக்களை நாம் நாடோறும் பாராயணம் பண்ணிவரின் எமது இடர்கள் நீங்கும் என்பதிற் சந்தேகம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தன் கருணை உங்களையும் எங்கள் அச்சகத்தையும் எங்கள் வெளியீடுகளையும் காப்பதாக.

வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்தன் என்று சொல்லக் கலங்குமே - செந்திநகர்ச்
சேவகா என்று திருநீறணிவார்க்கு
மேவ வராதே வினை.

இங்ஙனம்

ச. த. சின்னத்துரை

உரிமையாளர்

லீலா ஸ்டோர்ஸ், நியூ லீலா அச்சகம்

62, பண்டாரநாயக்க மாவத்த
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

**1. முருகா நீ உலகம் யாவையும் உய்ய உதித்தவன்!**

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்ருய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்(கு) உதித்தனன் உலகம் உய்ய''

**2. முருகா நீ தீயவர்களையும் ஆட்கொள்ளும் கருணைக் கடல்!**

"தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் உற்ருல்
தூயவ ராகி மேலைத் தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றே வரம்பிலா அருள்பெற்றுய்ந்தான்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. முருகா நான் உன்னைப் போற்றுகிறேன்!

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்கநின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னுன்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன் மாமயிலாய் போற்றி
முன்னிய கருணை யாறுமுகப் பரம்பொருளே போற்றி
கன்னிய ரிருவர் நீங்காக் கருணைவார் நிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள் இருக்கு மாமணியே போற்றி போற்றி

## 4. முருகா, அடைக்கலம்! அடைக்கலம்!

நண்ணினர்க் கினியாய் ஓலம் ஞான நாயகனே ஓலம்
பண்ணவர்க் கிறையே ஓலம் பரஞ்சுடர் முதலே ஓலம்
எண்ணுதர்க் கரியாய் ஓலம் யாவையும் படைத்தாய் ஓலம்
கண்ணுதற் பெருமான் நல்கும் கடவுளே ஓலம் ஓலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேவர்கள் தேவே ஓலம் சிறந்த சிற்பரனே ஓலம்
மேவலர்க் கிடியே ஓலம் வேற்படை விமலா ஓலம்
பாவலர்க் கெளியாய் ஓலம் பன்னிரு புயத்தாய் ஓலம்
மூவருமாகி நின்ற மூர்த்தியே ஓலம் ஓலம்"

## 5. முருகா நீ பிணி தீர்க்கும் மருந்து!

"உயிர்ப்பிணி தவிர்க்கு மருத்துவ னென்கோ
உடற் பிணிக் கொருமருந் தென்கோ
மயக்குறு மனத்தி னிணைவெனும் பணியை
மாற்றிய கதிரவ னென்கோ
வியப்புறு புரண சொரூபநின் னருளை
வினையனே னேதெனப் புகல்கேன்
கயத்துரி தரித்தோன் புதல்வனே போரூர்க்
காங்கெயா தேங்கொளி மணியே."

- சிதம்பர சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. முருகா நீ வருக! வருக!

"உருகா மனமுஞ் சிவஞான முணரா வறிவு முனது புகழ்
ஓதா நாவு மோதக்கேட் டுவந்தே யினிய நதிபோலப்
பெருகா விழியு முடையேனைப் பிறவிக் கடலில் வீழாமற்
பேணியெடுத்திங் கெனதுள்ளம் பிரியா விரிஞ்சைப் பதிவாழு
முருகா வருக சதுர்வேத முதல்வா வருக வினைதீர்க்கு
முனைவா வருக மலராறு முகவா வருக திருமாலின்
மருகா வருக மயிலேறு மன்ன வருக அடியார்கள்
வாழ்வே வருக தெய்வசிகா மணியே வருக வருகவே"

- மார்கசகாய தேவர்

கருத்தே புகுந்து கதிகாட்டும்
கண்ணே வருக, மெய்ஞ் ஞானக்
கரும்பே வருக, கருணை பொழி
காரே வருக, ஆனந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருக்கே வருக, யாங்கள் பெறும்
பேறே வருக, மறை சொல்கிளிப்
பிள்ளாய் வருக, பிறங்கு தெய்வப்
பெம்மான் வருக, குறமடந்தை
தருக்கே வருக, மிடியகற்றும்
தருவே வருக மன்பதைக் கோர்
தஞ்சே வருக, எமையளிக்கும்
தாயே வருக, பவப் பிணிக்கு
மருந்தே வருக சமரபுரி
வாழ்வே வருக வருகவே
மறையின் சிரமெய்ப் பொருளான
வள்ளல் வருக! வருகவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. முருகா நீ வரம்தா !

"ஈயென்று நானொருவ ரிடம் நின்று கேளாத
  இயல்பும் என்னிடம் ஒருவரீ(து)
இடுஎன்ற போதவர்க் கில்லையென்று சொல்லாமல்
  இடுகின்ற திறமும் இறையாம்
நீயென்றும் எனைவிடா நிலையும்நா னென்று முள்
  நினைவிடா நெறியும் அயலார்
நிதியொன்றும் நயவாத மனமும் மெய்ந்நிலை யென்றும்
  நெகிழாத திடமும் உலகிற்
சீயென்று பேயென்று நாயென்று பிறர் தமைத்
  தீங்கு சொல்லாத தெளிவும்
திரமொன்று வாய்மையும் தூய்மையுந் தந்துநின்
  திருவடிக் காளாக்குவாய்
தாயொன்று சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
  தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
  சண்முகத் தெய்வ மணியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. முருகா உன் கருணை கிட்டினல் நாளும் கோளும் என்ன செய்யும்!

"நாளென் செயும்வினை தான்என்செ யும்எனை நாடிவந்த
கோளென் செயும் கொடுங் கூற்றென் செயும் குமரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே"

9. முருகா நீயே எனக்குத் துணை!

"விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்ரு
மொழிக்குத் துணைமுரு காவெனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே."

10. முருகா இயமனிடம் இருந்து என்னைக் காப்யாய்!

"கார்மாமிசைக் காலன் வரிற் கலபத்
தேர்மாமிசை வந்தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி யெனும்
சூர்மா மடியத் தொடு வேலவனே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காலன் செங்கட் கடாவினி லேறியே
கயிறு வீசிப் பிடியா முனமெனை
வேலுஞ் செங்கையி லேந்தி மயில்மிசை
விரைவில் வந்துவந் தஞ்சலென் றருளுவாய்
ஆலமுண்ட களத்த ரிடத்துறை
அறிவை கொஞ்சுறக் கொஞ்சுபைங் கிள்ளையே
தாலம் பாளை மதுக்குட மேந்திய
சமர மாபுரிச் சண்முக வேலனே.

## 11. முருகா நீ என் உள்ளத்தில் உறைவாய்!

குன்றம் எறிந்தாய் குரை கடலில் சூர்தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய் — என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய் என் உள்ளத்து உறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. முருகா உன் வேலுண்டு துணை!

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்குக்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா — முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டு உருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்.

## 13. முருகா உன்னை ஒழியத் துணையில்லை!

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் — பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14. முருகா அச்சம் வரும்போது ஆறுமுகத்துடன் வருவாய்!**

அஞ்சு முகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும் — நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்

**15. முருகா உன்னையே நம்பினேன்!**

முருகனே செந்திமுதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே — ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக் கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

**16. முருகா என்னைக் காப்பது உன் கடமையே!**

காக்கக் கடவியநீ காவாது இருந்தக் கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா - பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்கய் இனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. முருகா உன்னை நினைப்போர் பெறும் பயன்!

முருகா எனஉனை ஓதும் தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவார்! வியாதி அடைந்து நையார்
ஒருகால முந்துன்பம் எய்தார்! பரகதி யுற்றிடுவார்!
பொருகாலன் நாடு புகார்சம ராபுரிப் புண்ணியனே

சேல்பட்டு அழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட்டு அழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட்டு அழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்பும் அவன்
கால்பட்டு அழிந்ததிங் கென்தலை மேலயன் கையெழுத்தே

## 18. முருகா நின் சேவடி வாழ்க!

துய்யதாம் மறைக ளாலுந் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில் சீரடியார் வாழ்க வாழ்கஇப் புவன மெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீ ரடியாரெல்லாம்

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலா
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கியாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாத பங்கயங்கள் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
நீ வந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் குலகாலா
நாலந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

கொழும்பு நியூ லீலா அச்சகத்தின் செல்வர்
சைவத் திருவாளர்
சின்னத்துரை அவர்கள்
வெளியிட்ட
நாட்காட்டியின் பெருமை

காஞ்சிபுரம் தொண்டைமண்டலாதீனம் மெய்கண்ட
சந்தான ஞானபீடத்துக் குருமஹாசந்நிதா.
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமி
அவர்கள்
அருளுரை

சிந்தனையில் அழுந்திப்பின் பலவு மாய்ந்து
சிறந்ததையும் மறைந்ததையும் மறந்த யாவ
எந்தமது பெரியரது சால்பும் நாட்டின்
இயல்புகளு நாகரிகமு தொழிலுமிரு ஞானம்
தந்ததையும் தந்தசின்னத் துரைவேள் தோற்றம்
சான்றுதிகழ் லீலா அச்சக நாட் காட்டி
வந்தபின்பு மற்றைய நாட் காட்டிகளுண்டோ
வழக்கே! பெருஞ்செல்வர் அவர் வாழ்க நன்றே

சிவம்
16.4.72.

இப்புத்தகம் தேவையானோர் நேரில்
பெற்றுக்கொள்ளலாம்.

தபாலில்: கவரில் 15 சத முத்திரை ஒட்டி முகவரி
எழுதி கடிதத்திற்குள் வைத்தனுப்பிக் கேட்கவும்

நியூ லீலா, கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'லீலா' பஞ்சாங்க
# சித்திரக் கலண்டர்

ஆராய்ச்சிச் சித்திரங்கள்
வென்று

சம்பூரண சூரிய கிரகணம்



இலங்கையில்
மட்டும் 20-6-1955
காலை 7.07 மணி
முதல் 9.29 வரை
அந்நேரம்
காக்கை
கரைந்தது கோழி கூவியது.

1974-6-20-ல் காணலாம்!

**1974 லீலா கலண்டரை தேடி வாங்கிப் பாவியுங்கள்!**

●

கிரகலட்சுமி, கலைக்களஞ்சியம் எனப் புகழப்படும் அம்சங்கள் பொருந்தியது.
லீலா கலண்டர் சரித்திரத்தையே மாற்றியமைத்தது

## 'லீலா' ஒன்றே!

பதிப்பு:
நியூ லீலா அச்சகம்,
33, செள். செபஸ்தியன் மேடு,
கொழும்பு-12.

விநியோகஸ்தர்கள்:
லீலா ஸ்டோர்ஸ்,
249, ஓல்கொட் மாவத்தை
கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org